ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 1.8 – தொடர்சங்கிலிகை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 1.8 – தொடர்சங்கிலிகை

‡ தொடர் சங்கிலிகை சலார் பிலார் என்னத் ⋆
    தூங்கு பொன்மணி ஒலிப்ப ⋆
படு மும்மதப் புனல் சோர ⋆ வாரணம்
    பைய நின்றூர்வது போல் ⋆
உடன் கூடிக் கிண்கிணி ஆரவாரிப்ப ⋆
    உடை மணி பறை கறங்க ⋆
தடந் தாளிணை கொண்டு சார்ங்கபாணி ⋆
    தளர்நடை நடவானோ ॥ **1.8.1** ॥

செக்கரிடை நுனிக் கொம்பில் தோன்றும் ⋆
    சிறு பிறை முளைப் போல் ⋆
நக்க செந் துவர் வாய்த் திண்ணை மீதே ⋆
    நளிர் வெண்பல் முளை இலக ⋆
அக்குவடம் உடுத்தாமைத் தாலி
    பூண்ட ⋆ அனந்தசயனன் ⋆
தக்க மா மணிவண்ணன் வாசுதேவன் ⋆
    தளர்நடை நடவானோ ॥ **1.8.2** ॥

மின்னுக் கொடியும் ஓர் வெண் திங்களும் ⋆
    சூழ் பரிவேடமுமாய்ப் ⋆
பின்னல் துலங்கும் அரசிலையும் ⋆
    பீதகச் சிற்றாடை யொடும் ⋆
மின்னில் பொலிந்ததோர் கார்முகில் போலக் ⋆

கழுத்தினில் காறையொடும் ⋆
தன்னில் பொலிந்த இருடீகேசன் ⋆
தளர்நடை நடவானோ ‖ **1.8.3** ‖

கன்னல் குடம் திறந்தால் ஒத்தூறிக் ⋆
கணகண சிரித்துவந்து ⋆
முன் வந்து நின்று முத்தம் தரும் ⋆ என்
முகில் வண்ணந் திருமார்வன் ⋆
தன்னைப் பெற்றேற்குத் தன்வாய் அமுதம்
தந்து ⋆ என்னைத் தளிர்ப்பிக்கின்றான் ⋆
தன் எற்று மாற்றலர் தலைகள் மீதே ⋆
தளர்நடை நடவானோ ‖ **1.8.4** ‖

முன்னல் ஓர் வெள்ளிப் பெருமலைக் குட்டன் ⋆
மொடு மொடு விரைந்தோடப் ⋆
பின்னைத் தொடர்ந்ததோர் கருமலைக் குட்டன் ⋆
பெயர்ந்தடியிடுவது போல் ⋆
பன்னி உலகம் பரவி ஓவாப் ⋆ புகழ்ப்
பலதேவன் என்னும் ⋆
தன் நம்பி ஓடப் பின் கூடச் செல்வான் ⋆
தளர்நடை நடவானோ ‖ **1.8.5** ‖

ஒரு காலில் சங்கொரு காலில் சக்கரம் ⋆
உள்ளடி பொறித்தமைந்த ⋆
இரு காலும் கொண்டங்கங்கெழுதினாற் போல் ⋆
இலச்சினை பட நடந்து ⋆
பெருகா நின்ற இன்ப வெள்ளத்தின் மேல் ⋆
பின்னையும் பெய்து பெய்து ⋆

கரு கார்க் கடல் வண்ணன் காமர் தாதை ⋆
    தளர்நடை நடவானோ ‖ **1.8.6** ‖

படர் பங்கய மலர் வாய் நெகிழப் ⋆
    பனி படு சிறு துளி போல ⋆
இடங்கொண்ட செவ்வாய் ஊறி ஊறி ⋆
    இற்றிற்று வீழ நின்று ⋆
கடுஞ்சேக் கழுத்தின் மணிக்குரல் போல் ⋆
    உடை மணி கண கணென ⋆
தடந் தாளிணை கொண்டு சார்ங்கபாணி ⋆
    தளர்நடை நடவானோ ‖ **1.8.7** ‖

பக்கம் கருஞ்சிறுப்பாறை மீதே ⋆
    அருவிகள் பகர்ந்தனைய ⋆
அக்குவடம் இழிந்தேறித் தாழ ⋆
    அணி அல்குல் புடை பெயர ⋆
மக்கள் உலகினில் பெய்தறியா ⋆
    மணிக் குழவி உருவின் ⋆
தக்க மா மணிவண்ணன் வாசுதேவன் ⋆
    தளர்நடை நடவானோ ‖ **1.8.8** ‖

வெண் புழுதி மேல் பெய்து கொண்டளைந்ததோர் ⋆
    வேழத்தின் கருங்கன்று போல் ⋆
தெண் புழுதியாடித் திரிவிக்கிரமன் ⋆
    சிறு புகர் பட வியர்த்து ⋆
ஒண் போதலர் கமலச் சிறுக்கால் உறைத்து ⋆
    ஒன்றும் நோவாமே ⋆

தண் போது கொண்ட தவிசின் மீதே ⋆
    தளர்நடை நடவானோ ॥ **1.8.9** ॥

திரை நீர்ச் சந்திர மண்டலம் போல் ⋆
    செங்கண்மால் கேசவன் தன் ⋆
திரு நீர் முகத்துத் துலங்கு சுட்டி ⋆
    திகழ்ந்தெங்கும் புடை பெயர ⋆
பெரு நீர்த் திரை எழு கங்கையிலும் ⋆
    பெரியதோர் தீர்த்த பலம்
தரு நீர் ⋆ சிறுச்சண்ணம் துள்ளம் சோரத் ⋆
    தளர்நடை நடவானோ ॥ **1.8.10** ॥

‡ ஆயர் குலத்தினில் வந்து தோன்றிய ⋆
    அஞ்சன வண்ணன் தன்னைத் ⋆
தாயர் மகிழ ஒன்னார் தளரத் ⋆
    தளர்நடை நடந்ததனை ⋆
வேயர் புகழ் விட்டுசித்தன் ⋆ சீரால்
    விரித்தன உரைக்க வல்லார் ⋆
மாயன் மணிவண்ணன் தாள் பணியும் ⋆
    மக்களைப் பெறுவர்களே ॥ **1.8.11** ॥

அடிவரவு — தொடர் செக்கர் மின்னு கன்னல் முன்னல் ஒருகாலில் படர் பக்கம் வெண் திரை ஆயர் பொன்

தொடர்சங்கிலிகை முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்